DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திவ்யா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கார்த்திக் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.02.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் புளியாலில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். கடந்த 24.05.2018 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு பின்னால் எங்கள் அத்தை பெயரில் உள்ள இடத்தில் செல்லம்மாள் என்பவர் குப்பை கொட்ட வந்தார். அதை கேட்டதற்கு ஆஜர் எதிரிகளான ராஜ்குமாரும், குழந்தைராஜ்ம் என் கணவரையும், என் அத்தை ராஜாமணியையும் போட்டு அடித்துவிட்டார்கள். என் அத்தையை கீழே போட்டு மேலே ஏறி ராஜ்குமாரின் மனைவியான தமிழரசி அடித்தார். அப்போது நான் போய் விலக்கிவிட்டேன். பின்பு நாங்கள் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துவிட்டு தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

எதிரிகள் தரப்பில் என் கணவர்மீதும் என் மாமியார் மீதும் என் மீதும் புகார் கொடுத்து வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபிறகு காவல் நிலையத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் யார் யார் சென்றார்கள் என்றால், என் கணவரும், என் மாமியாரும் சென்றார்கள் நான் செல்லவில்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் என் கணவர் அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை: இல்லை**</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.